# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை பசுமை இயக்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**2007, திசெம்பர் மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 10.00 தபாற் செலவு : ரூபா 5.00

# 2007 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை பசுமை இயக்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ.—(4/2006)

## இலங்கை பசுமை இயக்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை பசுமை இயக்கம்" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான ஒழுங்கமைப்பொன்று, சொல்லப்பட்ட ஒழுங்கமைப் புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற் றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக் கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பு கூட்டிணைக்கப்பட விண்ணப் பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை பசுமை இயக்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப் பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை பசுமை இயக்கத்தின் உறுப்பினர்களாக இப்போது உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை பசுமை இயக்கம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் தற்றுணிபின்படி அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தல் வேண்டும். இலங்கை பசுமை இயக்கத்தை கூட்டிணைத்தல்.

2–PL. 001596 – 1,065 (2007/11)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) பாதுகாப்புடன்கூடிய பாரம்பரிய கமத்தொழில் ஜீவனோபாயத்தை நவீனமுறைகளுடன் இசைந்தொழுகுவனவாக மாற்றுவதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குதல் ;

(ஆ) பொதுமக்களின் வாழ்க்கையை வலுப்படுத்துவதற்கு உகந்த முறையில் நன்னிலையிற் பேணுவதற்காக இயைபான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல் ;

(இ) மக்களின் பங்கேற்பை ஆகக் கூடிய அளவில் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூர் மாவட்ட அத்துடன் தேசிய மட்டங்களில் மக்கள் ஒழுங்கமைப்புகளுடன் ஒரு வலைப்பின்னல் என்ற முறையில் செயலாற்றல் ;

(ஈ) சூழலுடன் இசைவான கமத்தொழில் ஜீவனோபாயத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள், தீர்வுகள் என்பவற்றை இனங்காணுதலும் வேலைக்களங்கள், கருத்தரங்குகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும், அவை மூலம் பெறப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் ஆவணமிடுதலும் ;

(உ) புதிய கருத்துக்கள், தேர்ச்சிகள் மற்றும் அறிவு பற்றிப் பொதுமக்கள் அறிவதற்கெனப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்தல் ;

(ஊ) மக்களின் போக்குகள், தேவைகள், நம்பிக்கைகள் என்பவை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கையில் பலவித பூகோள காலநிலை நிலவும் வலயங்களில், ஆராய்ச்சிப் பொருட்கள், ஆய்வுநிலையான பதிவேடுகள், எடுத்துக்காட்டுகள் மற்றும் தகவல்கள் அடங்கிய வெளிவாரி நிலையங்களையும் பண்ணைகளையும் தாபித்தல் ;

(எ) விளைச்சலைச் சீராக்குதல் தொடர்பான ஊக்குவிப்புகளை அளித்தலும், மக்களின் உடனலத்தையும் சுகாதாரத்தையும் பேணிக்காக்கும் வகையில் சூழலுடன் இசைவான கமத்தொழில், கைத்தொழில் மன்றத்தைத் தாபித்தலும் ;

(ஏ) உள்நாட்டுப் பிழைப்பாதாரத் துறையிலும் ஏற்றுமதி, கமத்தொழில் துறையிலும் ஈடுபட்டுள்ள மக்களுக்கு உதவியளித்தலும், அத்தகைய துறைகளில் உற்பத்தித் திறனைச் சீராக்குதலும் ;

(ஐ) காணி அபிவிருத்தி, மற்றும் கமத்தொழில் செயற்பாடுகளின் முகாமையைப் பொறுப்பேற்றல் ;

(ஒ) கிராமிய சிறு கைத்தொழில்களுக்கும் மற்றும் சுயதொழில் தோற்றுவித்தலுக்கும் துணைபுரிதலும் அவற்றுக்கு ஊக்கமளித்தலும் ;

(ஓ) சூழலின் நிலைபெறுதகு அபிவிருத்திக்கும் பாதுகாப்பிற்கும் தேவைப்படுத்தப்பட்ட உண்ணாட்டுத் தாவரங்களைப் பேணுதலும் பாதுகாத்தலும் பெருக்குதலும்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

(அ) வங்கிக்கணக்குகளைத் திறக்கவும், தொழிற்படுத்தவும், மூடவும் ;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் சேகரிக்கவும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முதலீடு செய்யவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஊழியர்களை நியமிக்கவும், வேலைக்கமர்த்தவும், பதவிநீக்கஞ்செய்யவும் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அவர்களுக்குச் செலுத்தவும் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும், கட்டுப்பாடும், நிருவாகமும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, தலைவர், துணைத்தலைவர், இணைச்செயலாளர்கள் இருவர் மற்றும் பொருளாளர் அடங்கிய தொழிற்பாட்டுக்குழு ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) தலைவர் தொழிற்பாட்டுக்குழுவின் ஒவ்வொரு கூட்டத் திற்கும் தலைமைதாங்க வேண்டும். தொழிற்பாட்டுக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைவர் வருகைதராதிருந்தால் துணைத் தலைவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) தொழிற்பாட்டுக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் ஓர் உறுப்பி னரைத் தேர்ந்தெடுத்தலில் அல்லது பெயர் குறித்து நியமித்த லிலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்ற தெனக் கருதப்படுதலாகாது.

(4) கூட்டுத்தாபனத்தின் முதலாவது தொழிற்பாட்டுக்குழு வானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற இலங்கை பசுமை இயக்கத்தின் தொழிற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

செயற்பாட்டுக் குழு.

**6.** தலைவர், துணைத் தலைவர், இணைச் செயலாளர்கள் இருவர், பொருளாளர் மற்றும் உறுப்பு ஒழுங்கமைப்புகளிலிருந்து ஐந்து பிரதிநிதிகள் என்போரைக் கொண்டிருக்க வேண்டிய செயற்பாட்டுக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக் களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறை யாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிக ளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும் உறுப்பினர்க ளைச் சேர்ந்துக்கொள்ளுதலும், உறுப்பினர் விலகுத லும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் மற்றும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) தொழிற்பாட்டுக் குழுவின் உறுப்பிர்களைத் தேர்ந்தெடுத்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், தொழிற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களது பதவிக் காலங்களும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) தொழிற்பாட்டுக் குழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் மற்றும் அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதியைப் போன்று அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கொடை, இறுதிவிருப்பாவணைக் கையுதிர்ப்பு, மானியக்கொடை, நன்கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்றவகையாகப் பெறப்படும் எல்லாப் பணங்களும், தொழிற்பாட்டுக்குழுவினால் முடிவு செய்யப்படக் கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைக்கும், அபிவிருத்தி செய்யும் அல்லது சீராக்கும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டுச் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றித் தகுந்தவாறான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைக் கூட்டுத்தாபனம் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது பரிசோதனை செய்யப்பட்டுக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வருமான செலவினைக் கணக்கினதும் ஐந்தொகையினது சரியான தன்மை, இலங்கை வரைவு பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இணைவுறுப்பினராகவிருக்க வேண்டியவரும். கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்பட்டவருமான கணக்காய்வாளர்களினால் அத்தாட்சிப் படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

ஒழுங்கமைப்பினால் செலுத்தப்படவுள்ளனவும் ஒழுங்கமைப்பிற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று ஒழுங்கமைப்புக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று ஒழுங்கமைப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**11.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கக் கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப் படுவதன்மீது எஞ்சியுள்ள ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது, எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அவ்வாதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை உடையனவும், அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்படுகின்றனவுமான வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னரான நேரத்தில் அந்நிறுவனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பொறிக்கப்படுதல் வேண்டும்.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவரினதும், செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல், எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**14.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக,

கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து வருமதியாகவிருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணங்களின் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்